முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 493/2019

தேதி : 16-04-2026

(வா.சா.2) – செல்வி.ப்ரியதர்ஷினி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 29ம் பிரதிவாதி மற்றும் 34ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>29ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

29ம் பிரதிவாதியின் பெயர் என்ன என்றால் ராமசாமி. அவர் என்ன செய்கிறார் என்றால் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து விஜய் ஆட்டோ கடை வைத்துள்ளார். 29ம் பிரதிவாதி எந்த சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றும், அவர் எந்த சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் ஆவணத்தை பார்க்கவில்லை, ஆனால் சர்வே எண். 5/2ல் தான் கட்டியுள்ளார் .29ம் பிரதிவாதியின் ஆவணங்களை பார்க்காமல் தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் கிரைய ஆவணங்களை பார்க்கவில்லை, சர்வே எண்.5/2 வழக்கு சொத்தின் அளவுகளை பார்த்து அவர் கட்டிடம் கட்டியுள்ளதாக பார்த்தேன். நான் சொல்வது தவறு என்றும், சர்வே எண். 5/2ல் கட்டிடம் கட்டவில்லை என்றால் சரியல்ல. 29ம் பிரதிவாதி சுபாஷ் போஸ் என்பவருக்கு 1977 பாகப்பிரிவினை கிடைத்த TS No. 4/1C சொத்தை 2002ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. ஆனால் சுபாஷ் போஸ் என்பவர் எங்கள் சொத்தின் தெற்கு எல்கையின் உரிமையாளராக இருந்தார், தற்போது அவர் உரிமையாளரா என்று தெரியாது. வழக்கானது TS No.5/2 ஐ பொறுத்தது என்றும், ஆனால் 29ம் பிரதிவாதியுடையது TS 4/1Cல் உள்ளது என்றும், எனவே அவர் இவ்வழக்கிற்கு அவசியமற்றவர் என்றால் சரியல்ல. 29ம் பிரதிவாதி வாங்கிய சொத்து தற்போது TS 24/2C ஆக உள்ளது என்றால் சரிதான். 29ம் பிரதிவாதி 2002ல் கிரையம் வாங்கும்போதே கட்டிடத்துடன் தான் கிரையம் வாங்கினார் என்றும் நான் சொல்வது போல் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே அவரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>34ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாதிகள் இறந்தபோன பாலசுப்ரமணியனின் வாரிசுகள் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு

என்றும், அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாலசுப்ரமணியனின் தந்தை தான் குழந்தைவேல் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.5/2. 34ம் பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் எங்கள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் அதன்மூலம் தெரியும். எப்படி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் வழக்கு நிலுவையில் இருக்கும்போது கட்டிடம் கட்டியுள்ளார். அந்த கட்டிடத்தை காட்ட புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் எந்தவொரு புகைப்படமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 34ம் பிரதிவாதிகள் 14.11.2005ம் தேதி TS No..4/1C ஐ பொறுத்து கிரையம் வாங்கியுள்ளார் என்றும், அதற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் அவர் கிரையம் வாங்கியிருப்பது எனக்கு தெரியாது, அனால் எங்கள் சொத்தில் தான் கிரையம் பெற்றுள்ளார். 34ம் பிரதிவாதி TS No. 4/1Cல் தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றும், அவருக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. 34ம் பிரதிவாதியிடமிருந்து அச்சுறுத்தி துர்லாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் எந்தவொரு ஆவணமும் இல்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.